உ
சிவமயம்



வடமராட்சிப் பகுதி, கரவெட்டி
வடதுன்னாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும்
உயர்சைவ வேளாண்குல திலகருமாகிய

# திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

அவர்களின்

# அமரத்துவ நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்



# கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
## அவர்கள்

தோற்றம்:
**1922-04-12**

மறைவு:
**1995-06-11**

### திதி வெண்பா

மன்னுதிரு யுவவருடம் மாண்புமிகு வைகாசி
பன்னுமொரு பூர்வபக்கச் சதுர்த்தசியில் - மின்னுபுகழ்
தேசொளிரும் திருநாவுக் கரசு திகழ்கயிலை
ஈசன் பதஞ்சார் தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1922-04-12

1995-06-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



### விநாயக வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# பஞ்ச புராணம்

### தேவாரம்

பேராயிரம் பரவி வானோ ரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை மந்திரமும்
தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத் திண்சிலை கைக்கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே.

### திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிமிகு திருவா ரூரில்
மழவிடையாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்து
பழவடி யாரொடும் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலகத் தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புந்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொட சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாராயணன் பாடல்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்க மா நகருளானே.

## திருவேகம்பமாலை

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுரிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவா கச்சியேகம்பனே.

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே.

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவியோகமானவர் தமக்கு நற்கதி வேண்டி
வழிபடுந் தெய்வங்களைத்

# துதிக்கும் பாடல்

## துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையார் துதி

மந்தமா ருதந்தவழ மலருதிரு வடதுன்னாலை
    மருவிநின் றருள்பொழியும் வல்லியானந்த விநாயகனே
சிந்தையெலாம் நின்னுருவே செறிந்துநிற்க வாணாளில்
    செய்யதிரு வடிநிழலே சேரவென நினைந்துருகி
வந்துந்தன் வீதிசுற்றி வழிபாடு செய்துநின்றேன்
    வருந்தியுனை வேண்டியெந்தன் வாழ்வதனை முடித்தே
பந்தமெலாம் அறுத்துவந்தேன் பவமறுத்தே யுந்தன்
    பாதார விந்தமதில் சேர்த்திடுவாய் பிள்ளையாரே.

## குலதெய்வம் அம்மன் துதி

தினமுழுந்தன் திருக்கோயில் விளக்கேற்றி
    திவ்வியமாய் எங்களயல் தனில் இருத்திவைத்து
நினைவெல்லாம் உன்பாத நிழலினிலே தானிருத்தி
    நித்தமுமே வணங்கிநின்றேன் நின்னருளை வேண்டி
கனவினிலும் மறவாது கருத்தினிலே நிறைந்து
    கலந்து நின்றாய் அம்மாளே குலதெய்வமானாய்
எனக்குந்தன் இன்னருளே பாலித்து அருள்வாய்
    இணையடியே தஞ்சமம்மா இனியகதி ஈவாய்.

## செல்வச்சந்நிதி முருகன் துதி

கற்பூரப் புகை நடுவே கலந்துநின்று
    கருணை மழை பொழிகின்ற கந்தவேளே
பொற்புடனே ஞானசத்தி வேலுருவில்
    புகழ்பாடும் பக்தர்களுக் கருளும் வேலே
அற்புதமாய் ஆறாத நோய்களெல்லாம்
    ஆற்றியருள் சொரிகின்ற ஆறுமுகனே
நற்பதமே நாடிவந்தேன் பிறவிநீக்கி
    நல்லருளே புரிந்துகதி யருளுவாயே.

## வல்லிபுர ஆழ்வார் துதி

அலைகடலின் வழிவந்த சக்கரத்தின்
    அருவுருவாய் அமர்ந்திங்கே அருள்பொழியும்
மலைபோன்ற மணற்குன்றின் மத்தியிலே
    மாண்புறவே கோயில்கொண்ட மாயவனே
நிலையில்லா நீர்க்குமிழி போன்ற வாழ்வை
    நீத்துந்தன் பாதார விந்தம் நாடி
உலையுமெந்தன் பவப்பிணியைப் போக்கவந்தேன்
    உந்தனது வைகுந்தம் சேர்த்தருளே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

வளம்புல கதித்தோங்கும் வடமராட்சிப் பகுதியிலே, கரவெட்டி வடதுன்னாலையம்பதியிலே உயர்சைவ வேளாண்குலத்திலே உதித்த கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் சிரேட்ட புதல்வனாக அமரர் திருநாவுக்கரசு அவர்கள், 1922 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12ஆம் திகதி அவனியில் பிறந்தார். செல்வவிநாயகம், தியாகராசா என்போரை உடன்பிறந்த தம்பியராகப் பெற்று தனித்துவ வாழ்வு வாழ்ந்தார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இவர், துன்னாலை காசிநாத வித்தியாலயத்திலே ஆரம்பக் கல்வியை முடித்தார். தொடர்ந்து கல்வி கற்பதை விடுத்து தந்தையாருக்கு உதவியாக விவசாயத் தொழிலை மேற்கொண்டார்.

தமது 27வது வயதிலே. தன்னூரைச் சேர்ந்த தம் சுற்றத்திலே, சின்னையா - மீனாட்சன் தம்பதியரின் தவ சிரேஷ்ட புதல்வியாகிய தனவதி என்பவரைத் திருமணஞ் செய்து வாழ்வாங்கு வாழ்ந்தார்.

இல்லற வாழ்விலே நல்லறம் மேற்கொண்ட தவப்பேற்றாலே மங்களேஸ்வரி, மகேஸ்வரி, மகேஸ்வரன், ஞானேஸ்வரி, புவனேஸ்வரி, அருளேஸ்வரி, இராசேஸ்வரி, பரமேஸ்வரி, நாகேஸ்வரி, உதயகுமார், இளவரதன் ஆகிய பதினொரு பிள்ளைகளைப் பெற்று பாக்கியவானாகப் பெருவாழ்வு வாழ்ந்தார். இவர்களுள் உதயகுமார் என்பவர் காலவியோகமாகி விட்டார்.

இராசரத்தினம், அரியதம்பி பரமேஸ்வரி, சிவசுந்தரம் (ஹொலண்ட்), சடாட்சரலிங்கம், அருந்தவராசா (ஜேர்மனி), சிவபவானந்தன் (லண்டன்) என்போரைத் தன் மக்களோடு இணைந்த மருமக்களாகப் பெற்று மலர்ந்த வாழ்வு வாழ்ந்தார்.

பாவபாஸ்கரன் - பிரியதர்சினி (ஜேர்மனி), சந்திரசோதி - கண்ணன், பாலசிங்கம் (லண்டன்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), பாலமோகன் (லண்டன்), பாலரூபன், கிரிதாஸ் (லண்டன்), கிருஷ்ணதாஸ், கண்ணதாஸ், நவநீதன், சர்மிளா, அஜந்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திக் (ஹொலண்ட்), மேனகா (ஹொலண்ட்), அசோகன் (ஜேர்மனி), அபிரான் (ஜேர்மனி) ஆகியோரைப் பேரப்பிள்ளையாகப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தார். துஷாந்தன் என்பவரைப் பீட்டப்பிள்ளையாகப் பெற்று பெருமகிழ்வெய்தினார்.

தலைசிறந்த கமக்காரனாகத் திகழ்ந்த இவர், தம்மூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை அங்கத்தவராகவும், கட்டைவேலி கிராமசபை உறுப்பினராகவும் பணியாற்றிச் சிறந்த சமூக சேவையாளராக விளங்கினார். தம்மூர் வல்லியானந்தப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை உறுப்பினராக இறுதிவரை பணியாற்றி உயர்ந்த பக்திமானாகவும் மிளிர்ந்தார்.

1995 ஆனிமாதம் பதினோராம் நாள் காலை வழமைப்படி நன்னீரெடுக்கத் துவிச்சக்கர வண்டியிலே சென்ற இவர், நடு வழியில் வீழ்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு (மந்திகை) எடுத்துச் செல்லப்பெற்று, உடன் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அன்று நள்ளிரவு 12 மணிக்கு அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி அமரரின் ஆவி பிரிந்தது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற, அம்பிகைபாலன் வல்லியானந்த விநாயகனை வழிபாடாற்றுவோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## மனைவி பிரலாபம்

வாழ்க்கையிலே துணைவியென வரித்தென்னை
வதுவைபுரிந் தில்லறமே வளம்பொலிய
ஆர்ந்தமன அன்போடு அரவணைத்து
அமைதியுற வாழ்ந்திருந்த எந்தன்துரையே
ஊழ்வினையோ உந்தனுக்கு முந்திஎந்தன்
உயிர்பிரிய வேண்டுமென இறைஞ்சிநின்றேன்
நாளுமினி உன்நினைவால் கண்ணீர்சிந்தி
நான்வாடித் தவிக்கவிட்டுச் சென்றாய்ஐயா.

## உள்ளூரில் இருக்கும் பிள்ளைகள் பிரலாபம்

கண்கண்ட தெய்வம்போல் காட்சிதந்து
கவலையென்ப தறியாது காத்து வளர்த்து
நண்ணுமெங்கள் நல்வாழ்வு சிறக்க வென்றே
நயந்துதிரு மணவினைகள் ஆற்றி வைத்தீர்
எண்ணவில்லை இவ்வளவு விரைவா யெம்மை
இருந்தலறி ஏங்கவிட்டுச் செல்வீர் என்று
தண்ணெழில்சூழ் உங்களுடல் எம்திக் கடனால்
தழலாகி வெந்துருக விதியோ ஐயா.

## வெளி நாட்டிலிருக்கும் பிள்ளைகள் பிரலாபம்

நொந்துமனம் நோன்பிருந்து நுகர்தவங்கள் பலவியற்றி
நோய்நொடிகள் வாராது காத்துஎமை வளர்த்தெடுத்து
தந்தைமகற் காற்றுநன்றி தனைமனதிக் நினைவிருத்தி
தக்ககலை பலவூட்டி தகுந்தவாழ் வளித்த ஐயா
அந்திமத்தில் அருகிருந்து தெளிவூற்றிக் கதைகேட்டு
ஆற்றுகின்ற கடன்செய்து கொள்ளிவைக்காக் கொடியோம்
சிந்தையெல்லாம் நெக்குருகச் செய்வதறியாது நின்றோம்
செந்தீயில் எரிந்தாயோ? ஐயாநாம் என்செய்வோம்.

## சகோதரர் புலம்பல்

பொன்பெறலாம் பொருள்பெறலாம் போதுமட்டும்
புகழ்பெறலாம் பூதலத்தில் ஒருவயிற்றில்
ஒன்றாகப் பிறந்திங்கே உதவிநின்ற
உடன்பிறப்பை இழந்துவிட்டால் மீண்டொருகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றேனும் பெறணாமோ எங்கள் அண்ணா
என்றென்றும் எமைநாடி ஓடிவந்து
நன்றாகக் கதைபேசி நலமேகேட்பாய்
நமன்வந்தான் சடுதியிலே என்செய்வோமே.

## உள்ளூரிலிருக்கும் மருமக்கள் பிரலாபம்

மடிந்தனையோ மாமாவென் றழுவதல்லால்
மாதவனுன் வெளிநிரப்ப யாரோவுள்ளார்?
திடமுடனே வாழ்ந்திருந்த மாமாநீங்கள்
திகைக்கவைத்தே எம்மைவிட்டு ஏனோசென்றீர்?
இடரெமக்கு வந்துவிட்டால் இதயமேங்க
எவருதவி இனிச்செய்வார் ஐயோமாமா
கொடுமையிலுங் கொடுமையிது கூற்றன்வந்தான்
கோலவுடல் சரிந்ததுவே என்செய்வோமே.

## வெளிநாட்டிலிருக்கும் மருமக்கள் பிரலாபம்

நாட்டிலுள்ள பயங்கரத்தின் நடுக்கத்தாலே
நாமெல்லாம் அந்தியத்தில் அருகிருந்து
ஊட்டிப்பால் வார்த்திடவோ ஒருவார்த்தைதானும்
உளமாரக் கேட்டிடவோ முடியவில்லை
வாட்டுகின்ற வேதனையால் வதங்கியிங்கே
வாய்விட்டுப் புலம்புகின்றோம் மாமாஉங்கள்
காட்டுகின்ற ஒளிவீசும் வதனமினிமேல்
காண்போமோ கவலையிது ஆற்றொணாதே.

## உள்ளூரிலிருக்கும் பேரப்பிள்ளைகள் இரங்கல்

இன்சொல்லால் அறிவுரைகள் எடுத்தோதி அரவணைத்து
இனியபண்டம் பலவூட்டி எமைவளர்த்த அம்மப்பா
புன்செயல்கள் புரியாது புத்திமதி புகட்டியெமை
புகழ்வாழ்வு வாழவழி வகுத்திட்ட அப்பப்பா
புன்முறுவ லோடுபல கதைகூறிச் சிரிக்கவைத்துக்
குழந்தையென எம்மோடு ஊடாடும் அம்மப்பா
அன்புருவம் அனல்தனிலே வெந்துபிடி சாம்பராய்
அணைந்ததுவே ஐயையோ என்செய்வோம் அப்பப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளி நாட்டிலிருக்கும் பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்புடனே அரவணைத்து ஆசைமுத்தம் பலவீந்து
அழகொளிரக் கதைகேட்டு அகம்மகிழும் அம்மப்பா
பண்பொழுகப் பலவாறு புத்திமதி பலசொல்லிப்
பரிந்தெம்மை பார்த்தெடுத்து வளர்த்தெடுத்த அம்மப்பா
துன்பமுறு நோய்வாட்டாது ஒருநாளில் மாண்டசெய்தி
துவளவைத்தே எம்மையெலாம் துக்கமுற வைத்ததையோ
என்புருக எம்கூடனாய் இறுதியிலே அருகினிலே
இருந்துபந்தம் பிடித்தெங்கள் கடமைசெய்யா பாவிநாமே

## மறுசகோதரர் இரங்கல்

ஒன்றாக ஒருவயிற்றி லுடன்பிறவா விடினும்
உதிரத்தின் பாசமதாய் வளர்ந் திருந்தோம்
கொன்றொழிக்க விதிசெய்த சதியோ ஐயோ
கொடுமையிலுங் கொடுமையிது சகோதரனே
என்றுநா முன்முகத்தைக் காண்போ மந்தோ
ஏங்கியழ வைத்தேநீ எங்கே சென்றாய்
நன்றாக எம்கூட வாழ்வா யென்ற
நனவெல்லாம் கனவாச்சே நாமென் செய்வோம்.

## பெறாமக்கள் பிரலாபம்

பெற்றவொரு தந்தையெனப் பேரன்புபூண்ட பெரியப்பா
உற்றவொரு விபத்தாலே உயிர்பிரிந்த துயரமது
பற்றியிங்கே பரிதவித்து பதறிநின்று புலம்புகிறோம்
கொற்றவனே உம்மைப்போல் குணவாளனைக் காண்போமோ

## பிட்டப்பிள்ளை இரங்கல்

அவனியிலே உதித்திங்கே சின்னாட்கள் ஆகுமுன்பே
தாத்தா ~~அப்பப்பா~~ உயிர்துறந்தார் அதுஎந்தன் பலனோ
தவப்பயனாற் பிறந்தநான் தாத்தாவைக் காணாது
தவித்திடவும் விதியோ தாங்காத வேதனையே.

## சுற்றஞ்சூழல் பிரலாபம்

எங்களுக் கெந்தவித இடுக்கண்ணோ பிரச்சினையோ
ஏற்பட்டால் எதிர்நின்று சிரமமே பாராது
தங்களுக்கு வந்தவொரு துயரெனவே மனத்திருத்தி
தன்னலமே பேணாது தலைகொடுத்து உதவிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது வள்ளன்மை உதவிகளை நாம்மறவோம்
உள்ளத்தில் இருத்தியுமை நினைந்திடுவோம் உத்தமனே!
தங்ககுணத் திருநாவுக் கரசுவே நாங்கள்
தாங்கொணா வேதனையாற் துடித்தலறிக் கலங்கினமே.

## தேற்றம்

தேற்றிருந்தார் இன்றில்லை நிலவுலகின் நியதி யிது
தோற்றுமுயிர் அத்தனையுந் துஞ்சுவது திண்ணமன்றோ
ஏற்றமிகு திருநாவுக்கரசு இயற்கையே எய்தினார்
ஊற்றெடுக்குந் துயராறி உமைபாகன் அடிபணிவீர்.

ஆக்கம்;
சபா. செல்வநாயகம்
ஆசிரியர், தென்கருணை

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவர், அமரர் கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் இயற்கையடைந்த வேளை, அந்திமக் கிரியைகளிற் கலந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உடனிருந்து உதவியோருக்கும், இன்றைய அந்திய அஸ்திக் கிரிகைகளிற் கலந்து கொண்டோருக்கும் எமது அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''வல்லியானந்தம்''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
11. 07 1995

இவ்வண்ணம்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், குடும்பம்

தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org